**மாகாண வீதிகள் செயற்திட்டம் (வடக்கு மாகாணம்) - 2014**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் (வடக்கு மாகாணம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4630 –எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 4.09(பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கையின் வட மாகாணசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. முன்னேற்றப்பட்ட வீதி உட்கட்டமைப்பினை நிலையான முகாமைத்துவத்தின் ஊடாக இலங்கையில் வட மாகாணத்தில் சமூக – பொருளாதார நிலையங்களிற்கான நுழைவுப் பாதைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,399.25 மில்லியனிற்கு சமமாக ஐ.அ.டொலர் 21 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய

மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த மெய்மையாய்வு அத்தகைய சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஐடிஏ | 21.00 | 2,399.25 | 6.17 | 806.80 | 15.05 | 2,023.08 |
| மொத்தம் | 21.00 | 2,399.25 | 6.17 | 806.80 | 15.05 | 2,023.08 |

### 3.2. பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வட மாகாணத்தில் ஏறத்தாழ 100 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 56.17 கிலோ மீற்றர்கள் நீளமான 12 மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு செயற்திட்டத்தால் 04 ஒப்பந்த பொதிகள் வழங்கப்பட்டிருந்தது. புனரமைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 12 மாகாண வீதிகளில், 2013 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு 150 நாட்கள் முதல் 174 நாட்கள் வரையான வீச்சுடைய கால தாமதத்துடன் 02 பொதிகளின் கீழ் 23.07 கிலோமீற்றர் நீளமான 06 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 26.42 கிலோமீற்றர் நீளமான ஏனைய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் வீதிகளின் புனரமைப்பு வேலையின் நோக்கெல்லை வழமைபோல் மாற்றமடைந்தது. ஆதலால், பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கும் நேரத்தில் முறையான நில அளவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிவன் கோவில் வீதி, வேலனை- சுருவில் வீதி மற்றும் மண்டைதீவு வீதி என்பவற்றின் புனரமைப்பு வேலைகளின் அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட அளவீடுகள் 36 சதவீதம் முதல் 250 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரணாகவிருந்தது.

(ஆ) 02 பொதிகளின் கீழான 06 மாகாண வீதிகளின் புனரமைப்பு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் குறைபாட்டுப் பொறுப்புக்காலம் 2013 ஒக்தோபர் 30 இல் முடிவடைந்திருந்த போதிலும் அத்தகைய வீதிகள் 72

நாட்கள் முதல் 132 நாட்கள் வரையான வீச்சுடைய கால தாமதத்துடன் வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் கையேற்கப்பட்டிருந்தது.

(இ) தகுந்த காரணம் இல்லாமல் செயற்திட்ட பணிப்பாளரினால் 170 கலண்டர் நாட்களுக்கு மேலதிகமாக 02 பொதிகளின் கீழ் 06 மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகளிற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் கடனளிக்கும் முகவரிடமிருந்து முன்னனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**3.4. சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் ஒப்பந்த பொதியை பூர்த்தியாக்கியிருந்த ஒப்பந்தகாரர் ஒருவர் ரூபா 68 மில்லியன் மேலதிகமாக கோரியிருந்ததுடன் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட நடுவர் தீர்ப்பு நடைமுறை 2015 ஏப்ரல் 30 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சண்டிலிப்பாய்- கந்தரோடை வீதி, குருப்பியான்- குரும்பசிட்டி வீதி என்பவற்றின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் 2013 திசெம்பரில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது தொடர்பில் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் 2014 ஒக்தோபர் 10 இலேயே வட மாகாண சபையுடன் ஒப்பந்தகாரரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட அலுவலகத்திற்காக செயற்திட்டத்தால் கொடுப்பனவு செய்யப்படுகின்ற ரூபா 50,000 மாதாந்த கட்டிட வாடகை அப்பகுதியில் நிலவிய வாடகைகளை விட அதிகளவு உயர்வாக இருந்தது.

எவ்வாறாயினும், செயற்திட்டமானது மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்தது அவற்றின் மீது மதிப்பீடுகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.